//மிகவும் அவசரம்//தனிக்கவனம்//

தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–600 006

ந. க. எண். 070042/எம்/இ2/2018 நாள்: 11.2018

பொருள் : பள்ளி கல்வித்துறை – அறிவியல் நகரம், சென்னை–25 – 'எங்கும் அறிவியல்' – தமிழ் மாத இதழ் வெளியிடுதல் – அறிவியல் கட்டுரைகள் மற்றும் துணுக்குகள் அனுப்ப கோருதல் – சார்பு.

பார்வை : 1) அறிவியல் நகரம், உயர் கல்வித்துறை கடிதம் ஆர்.சி.எண். 989/மு.அ.அ,(2)/ 2018 நாள். 08.11.2018

*****

நகல் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

இணைப்பு: பார்வையில் காணும் கடிதம்

பள்ளிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

22/11/18

நகல்

துணைத்தலைவர்,
உயர் கல்வித்துறை,
காந்தி மண்டபம் சாலை,
பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்,
சென்னை–25 – அவர்களுக்குத் தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.

070042

13/11/18

1411

SD (NSS)

All CEO / All HMs.


# அறிவியல் நகரம்

உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்
சென்னை - 600 025.

**உ. சகாயம், இ.ஆ.ப.,**
துணைத்தலைவர்


ஆர். சி. எண். 989 / மு. அ. அ. (2) / 2018 நாள்: 08.11.2018

பெறுநர்

இயக்குநர்
பள்ளி கல்வித்துறை
டி பி ஐ வளாகம்
நுங்கம்பாக்கம், சென்னை.

அய்யா,

பொருள் : அறிவியல் நகரம், சென்னை – 25 – "எங்கும் அறிவியல்" – தமிழ் மாத இதழ் வெளியிடுதல் – அறிவியல் கட்டுரைகள் மற்றும் துணுக்குகள் – கோருதல் – தொடர்பாக.

---

அறிவியல் நகரம் தமிழகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கான அறிவியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. தற்போது இம்மாணாக்கர்களுக்காகவும் – பொது மக்களுக்காகவும் அறிவியல் விழிப்புணர்வை இன்னும் வலுவாகப் பரவச் செய்ய "எங்கும் அறிவியல்" என்ற தமிழ் மாத இதழினை அறிவியல் நகரம் விரைவில் வெளியிட உள்ளது.

இவ்விதழை வெளியிடுவதன் நோக்கம் தமிழக மாணாக்கர்களுக்கு அனைத்து அறிவியல் செய்திகளையும் தாய்மொழித் தமிழிலேயே கொண்டு சேர்ப்பதாகும். பூமிப்பந்தில் முன்னேறிய நாடுகள் அனைத்தும் தங்கள் மண்ணின் மொழியிலே – தாய் மொழியிலே தங்கள் வருங்காலத் தலைமுறைக்கு அறிவியலை உள்ளடக்கிய கல்வியினை அளித்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள மாணாக்கர்கள் மற்றும் பொது மக்களும் அறிவியல் செய்திகளை தமிழ் மொழியில் படித்து அறிந்து கொள்ள ஏதுவாக "எங்கும் அறிவியல்" என்கிற மாத இதழ் அனைவரின் பங்களிப்புடன் முற்றிலும் தமிழ் மொழியில் வெளிவருகிறது.


தொலைபேசி: 044-24454054, 24454034, நிகரி: 044-24454054, மின்னஞ்சல்: scicity@dataone.in | scicitychennai@gmail.com
இணையதளம்: www.sciencecitychennai.in

# அறிவியல் நகரம்

உயர் கல்வித்துறை, தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மைய வளாகம்

சென்னை - 600 025.


இவ்விதழ் அறிவியல் கட்டுரைகள், அறிவியலின் புதிய கண்டுபிடிப்புகள், பண்டைய தமிழக அறிவியல் பற்றிய குறிப்புகள் மற்றும் மாணாக்கர்களால் கேட்கப்படும் அறிவியல் வினாவிற்கு விடை அளித்தல் என்று பல வகையான தொகுப்புகளை உள்ளடக்கியதாகும்.

எனவே, பள்ளி மாணாக்கர்கள் அறிந்துக் கொள்ளும் வகையில், தங்களின் கீழ் இயங்கும் பள்ளி கல்வித்துறையில் உள்ள ஆசிரியர்களிடம் இருந்து அறிவியல் கட்டுரைகள் மற்றும் துணுக்குகள் கோரப்படுகின்றன. மேலும் பள்ளி மாணாக்கர்களிடம் இருந்து அறிவியல் கட்டுரைகள், துணுக்குகள் மற்றும் அறிவியல் கேள்விகள் வரவேற்கப்படுகின்றன. மாணாக்கர்களால் கேட்கப்படும் சிறந்த கேள்விகளுக்கு பரிசுகள் வழங்கப்படும். இக்கேள்விகளுக்கான பதில்கள் எங்கும் அறிவியல் இதழில் பிரசுரிக்கப்படும்.

அறிவியல் கட்டுரைகள் தமிழ் மொழியில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமலும் மற்றும் துணுக்குகள் 10 வரிகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். இவைகளை அறிவியல் நகரம் வெளியிடும் "எங்கும் அறிவியல்" என்ற இதழின் engumariviyal@gmail.com மின்னஞ்சல் முகவரி அல்லது துணைத்தலைவர், அறிவியல் நகரம், பிர்லா கோளரங்க வளாகம், காந்தி மண்டபம் சாலை, சென்னை 600 025 என்ற முகவரிக்கோ அனுப்பலாம். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தன்விவரக்குறிப்பு படிவம் அறிவியல் நகர இணைய தளம் www.sciencecitychennai.in பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே தங்களின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் கல்வி பயிலும் மாணாக்கர்களை அறிவியல் கட்டுரைகள் / துணுக்குகளை தமிழ் மொழியில் எழுதி அறிவியல் நகரத்திற்கு அனுப்பும் படி அறிவுறுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

துணைத்தலைவர்


தொலைபேசி: 044-24454054, 24454034, நிகரி: 044-24454054, மின்னஞ்சல்: scicity@dataone.in,
இணையதளம்: www.sciencecitychennai.in

# அறிவியல் நகரம்

தமிழ்நாடு அரசு

காந்தி மண்டபம் சாலை, சென்னை – 600 025

தொலைபேசி: 044–24454054 / 34 தொலை நகல்: 044–24454034

மின்னஞ்சல்: engumariviyal@gmail.com


---

## அறிவியல் கட்டுரைகள் / துணுக்குகள் சமர்ப்பிக்க தன்விவரக்குறிப்பு படிவம்

| கடவுச் சீட்டு அளவு புகைப்படம் |
|---|

பெயர் :

பணிபுரியும் பள்ளியின் முகவரி (ஆசிரியர்களுக்கு) :

மாணாக்கர்கள் பயிலும் வகுப்பு மற்றும் பள்ளியின் முகவரி :

சமர்ப்பிக்கும் அறிவியல் கட்டுரையின் / துணுக்குகளின் தலைப்பு :

கேட்கப்படும் அறிவியல் கேள்வி :

தொலைபேசி எண் :

அலைபேசி எண் :

மின்னஞ்சல் முகவரி :

கையொப்பம்